# போரா? சமாதானமா? அரசு திணறல்! - பி. பி. ஸி. விமர்சனம்

(கொழும்பு) ஆறு மாத இடைவெளிக்குப் பின், பாதுகாப்புத்துறையினர் நேற்றும் பத்திரிகையாளர்களைச் சந்தித்தனர். போர் என்றும் இல்லாத சமாதானம் என்றும் இல்லாத இரண்டுக்கும் இடைப்பட்ட ஓர் இரண்டும் கெட்டான்

(4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 36 திருவள்ளுவர் ஆண்டு 2025 பங்குனி 3 இதழ் 34
யாழ்ப்பாணம் புதன்கிழமை 16-3-1994

## ராணுவத்தீர்வையே அரசு விரும்புகிறது

(கொழும்பு) வடக்கு-கிழக்கு பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதை விட ராணுவ நடவடிக்கையின் மூலமே தீர்வை ஏற்படுத்த இலங்கை ஜனாதிபதி டி.பி. விஜயதுங்காவும் அவரின் அமைச்சர்களும் தீர்மானித்துள்ளதாக பி.பி.ஸி. நேற்று

(4-ம் பக்கம் பார்க்க)

## யுத்தத்தினால் தமிழர் துன்பப்படுகின்றனர்

(லண்டன்) சிறிலங்கா அரசு நாட்டின் வடக்கு கிழக்குப் பகுதிகளில் மேற்கொள்ளும் மனமற்ற யுத்த நடவடிக்கைகளால் தமிழ் மக்கள் சொல்ல முடியாத துன்பதுயரங்களை அனுபவித்து வருகின்றனர். மனிதாபி[illegible]

(4ம் பக்கம் பார்க்க)

### மண்டைதீவிலிருந்து —

# யாழ். நகர்மீது ஷெல் தாக்குதல்

# நால்வர் உடல் சிதறிப் பலி!

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு இராணுவ முகாமிலிருந்து நேற்றுக் காலை ஏவப்பட்ட ஷெல்களில் ஒன்று யாழ். இராசாவின் தோட்ட வீதிச் சந்திக்கு அருகாமையில் இருந்த மின்சாரக் கம்பத்துடன் மோதி வெடித்ததில் வீடொன்றிலிருந்த மிருக வைத்திய அதிகாரி உட்பட மூவரும், வீதியால் சென்ற ஒருவரும் ஸ்தலத்திலே உடல் சிதறிப் பலியானார்கள். வயோதிப மாது ஒருவர் காயமடைந்தார்.

நேற்றுக் காலை 10-30 மணி நேரமளவில் மண்டைதீவிலிருந்து பக்கமாக மேற்கொள்ளப்பட்ட தொடர் சரமாரியான ஷெல் தாக்குதலில் முதல் ஷெல் இராசாவின் சந்திக்கு வடக்கு மின்கம்பம் ஒன்றில் மோதிச் சிதறியது. இதனால் அருகிலிருந்த பரந்தாமன் என்பவரது வீட்டின் மீது ஷெல்லின் பெருமளவு சிதறல்கள் வீழ்ந்தன. இச்சிதறல்களினால் அவ்வீட்டிலிருந்த திருமதி ப. இந்தி

(2-ம் பக்கம் பார்க்க)

## ஷெல் தாக்குதல் குறித்து ஜனாதிபதிக்கு தகவல்

(யாழ்ப்பாணம்) மண்டைதீவு முகாமிலிருந்து ஏவப்பட்ட ஷெல்லினால் நேற்று கொல்லப்பட்ட நால்வரின் பெயர் விபரம் அடங்கிய செய்தி ஒன்றை, சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ் அலுவலகப் பிரதிநிதி தன் தலைமை அலுவலகத்திற்கு

(2ம் பக்கம் பார்க்க)

## கொலைக் கும்பல்களுக்கு பொலிஸார் ஆதரவு

(கொழும்பு) கொலைக் கும்பல்களை நிராயுதபாணியாக்கும் பணியில் பொலிஸார் ஈடுபடுவதைத் தவிர்ப்பதாகவும், இந்தக் கும்பல் தொடர்பாக பொலிஸில் முறைப்பாடு செய்பவர்களைப் பொலிஸார் திருப்பி அனுப்புவதாகவும் தமக்கு முறைப்பாடுகள் கிடைத்திருப்பதாக ஹம்பாந்

(4-ம் பக்கம் பார்க்க)

## வடக்கில் தாக்குதல் நடத்த புதிய திட்டம் வகுப்பு!

(கொழும்பு) வடபகுதியில், புதிய இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ள இராணுவம் புதிய திட்டங்களை வகுத்து வருவதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கிழக்கு மாகாணத்தில் அண்மையில் நடைபெற்ற தேர்தல் பாதுகாப்புக்காக அனுப்பிவைக்கப்பட்ட ஆயிரக்கணக்கான படையினர். தற்போது வடபகுதிக்கு கொண்டு செல்லப்படுவதாகவும் இப்படையினர், விடுதலைப் புலிகளுக்கு எதிராக, இராணுவம் மேற்கொள்ள இருக்கும் புதிய தாக்குதல் திட்டத்துக்கு பயன்படுத்தப்பட இருப்பதாகவும், இராணுவ வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (வி-வி)

## போதிய உணவுப்பொருள் அனுப்பப்படுகிறதாம்

(கொழும்பு) புதுவருட தினத்தை முன்னிட்டு வடபகுதிக்கு போதியளவு உடை, உணவுப் பொருட்களை அனுப்பப்போவதாக புனர்வாழ்வு - புனர்நிர்மாணத்துறை அமைச்சு நேற்று அறிவித்துள்ளது.

இவை தவிர இனிப்புப் பண்டங்கள், [illegible]களும் பெருமளவு அனுப்பப்

(2ம் பக்கம் பார்க்க

## கிளாலி-பூநகரி படகுச் சேவை

(யாழ்ப்பாணம்) கிளாலி - பூநகரி படகுச் சேவை, இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என்று விடுதலைப் புலிகள் [illegible] துறையினர் அறிவித்துள்ளனர்.

## இராணுவம் மீது புலிகளின் தாக்குதல்கள் தொடர்கிறது

(கொழும்பு) வடபகுதியில் தற்போது இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளை மீட்டெடுப்பதே இராணுவத்தின் தற்போதைய நடவடிக்கையாகும் என்று பிரிகேடியர் கெமுனு குலதுங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடத்தப்பட்ட பத்திரிகையாளர் மாநாட்டிலே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் அங்கு கூறியதாவது: வடபகுதியில் விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் இவ்வருடம் அதிகரித்துள்ளது. புலிகளின் தாக்குதலினால் கடந்த மூன்று மாதத்தில் மட்டும் 57 படையினர் கொல்லப்பட்டனர். புலிகள் திடீர் திடீரென படையினர் மீது தொடர் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர்.

வடபகுதியின் மீது இராணுவம் தற்போது மேற்கொண்டு

(2ம் பக்கம் பார்க்க)

## வீரச் சாவு

(யாழ்ப்பாணம்) யாழ். மாவட்டத்தில் நேற்றுக் காலை 6-30 மணியளவில் இடம் பெற்ற விபத்தில், வீரவேங்கை கந்தசாமி (துரைசாமி யோகராஜா-மட்டுநகர்) என்ற போராளி வீரச் சாவு அடைந்தார். இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துள்ளனர். -வி

## தமிழீழத்தை 'பிரபா' பெற்றுவிட்டார்

(கொழும்பு) திரு. பிரபாகரன் இப்போதே தமிழீழத்தைப் பெற்றுக்கொண்டுவிட்டார். அதனால் இப்போது எம்மில் ஒருவருக்காவது வவுனியாவிலிருந்து அப்பால் செல்ல முடியாதுள்ளது.

மேல் மாகாண முதலமைச்சர் திருமதி சந்திரிகா குமாரணதுங்கா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தென்பகுதியில் இடம் பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் பேசிய அவர் மேலும் கூறியதாவது:

இந்த அரசு ஒரு நாளும் வடக்குக் கிழக்கு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வராது என்றார். (இ-வி)

## வடக்கு கிழக்குப் பிரச்னைக்கு அரசியல் தீர்வுக்கு முயற்சி!

(கொழும்பு) வடக்கு-கிழக்குப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கான சகல முயற்சிகளையும் அரசாங்கம் தற்போது மேற்கொண்டு வருகின்றது. இவ்வாறு ஜனாதிபதியின் சர்வதேச விவகாரங்களுக்கான ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் நேற்று கொழும்பில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

திரு. பிரட்மன் வீரக்கோன் இதுகுறித்து மேலும் கூறுகை

(2-ம் பக்கம் பார்க்க)

